[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2023 ஏப்ரல் 21

ஏதுவாகவும் பொதுப் பாதை பயன்பாட்டிற்காக 0.3.5 ஹெக்டேர் இடம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. மாவட்ட நூலகத்தின் இடம் எதுவும் கையகப்படுத்தப்படவில்லை. மாவட்ட நூலகத்திற்கு சர்வே எண் 35/3-ல் 0.1.5.4 ஹெக்டேர் இடமானது அளிக்கப்பட்டுள்ளது. பாதையின் இருபுறமும் மீதமுள்ள நிலங்கள், புஞ்சை தரிசு என்ற வகைப்பாட்டில் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்நிலையில் மாவட்ட நூலகத்தினை விரிவாக்கம் செய்திட, கூடுதல் நிலம் வழங்கிட கோரி, இன்றுவரை கோரிக்கை மனு ஏதும் வரப்பெறவில்லை. பின்னர், கோரிக்கை வரப்பெற்றால், அதே சர்வே எண்ணில் மீதமுள்ள புஞ்சை தரிசிலிருந்து நிலமாற்றம் செய்திட மாவட்ட நிருவாகத்தால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஐ) வால்பாறை தொகுதி, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட தினக்கூலியை நடைமுறைப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வால்பாறை தொகுதியில் தேயிலைத் தோட்டங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு தினக்கூலியாக 425 ரூபாய் 40 காசு என்று அறிவிக்கப்பட்டு, இதுநாள்வரை அரசிதழிலும் வெளியிடப்படவில்லை; இதை நடைமுறைப்படுத்தவுமில்லை என்பதை அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

(ஒ) கீழ்வேளூர் தொகுதி, விவசாயக் கல்லூரிக்குக் கட்டடம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரில் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டுமென்பது எங்களுடைய நீண்ட நாள் கனவு, 10 ஆண்டுக் கால கனவு. அந்தக் கனவை நிறைவேற்றி, கீழ்வேளூரில் விவசாயக் கல்லூரி தந்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு

வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் முதலிலே நான் கோடானுகோடி. . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் இதில் ஒரு பிரச்சினையை மட்டும் சொல்லுங்கள்; நேரமில்லை.*

திரு. வி.பி. நாகைமாலி: *நான் தவறாக எதுவும் சொல்லவில்லையே!*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தவறு, சரி என்பதில்லை. எனக்கு நேரமில்லை.*

திரு. வி.பி. நாகைமாலி: *ஆகவே, கட்டடம் கட்டப்படாமல் இருக்கிறது. நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான கோப்புகள் தலைமைச் செயலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. கட்டடம் இல்லாத காரணத்தினால், கட்டமைப்பு வசதி இல்லாத காரணத்தினால், இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு படிக்கக்கூடிய மாணவர்கள் பக்கத்திலிருக்கிற கல்லூரிக்குச் சென்று படிக்கிற ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, விரைந்து அந்த நிலத்தை எடுத்து, கட்டடம் கட்டுவதற்கான பணியினைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிவு செய்யப்பட்டுவிட்டது; உட்காருங்கள்.*

(ஓ) தொழிற்சாலை நிலங்கள், ரியல் எஸ்டேட் நிலங்களாக மாற்றுவதைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் தொழிற்சாலைகளுக்கென்று கையகப்படுத்தப்பட்ட நிலங்களை தற்போது பெரும்* corporate *நிறுவனங்கள்* real estates*-ஆக மாற்றி வருகிறார்கள். அதேபோன்று, அந்த நிலங்களில் பஞ்சமி நிலங்களும் இருக்கின்றன. அதை அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்தி, ஏனைய திட்டங்களுக்கு அந்த நிலத்தைப் பயன்படுத்த முன்வர வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*